பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 25 செவ்வாய்க்கிழமை 08.06.2021 கதிர் 81

## தகவல் தொழில்நுட்ப சங்கத்தின் தலைவர் சி.ஐ.டியினரால் கைது

சமூக வலைத்தளங்களில் போலிச் செய்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில் இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கத்தின் தலைவர் ரஜீவ் யசிறு மெதிவ், சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார அமைச்சு உள்ளிட்ட அரச ☞2

## சமூக வலைத்தளத்தைக் கண்காணிப்பதால் ஊடகவியலாளர்களுக்குப் பாதிப்பு இல்லை



### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

போலிச் செய்திகளை வெளியிடும் சமூக வலைத்தளங்களைக் கண்காணிக்கும் தீர்மானம், நேர்மையாகச் செயற்படும் ஊடகவியலாளர்களைப் எந்த வகையிலும் பாதிக்காது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இன்று தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களைக் கண்காணிப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு ☞2

## சமுதித்த சமரவிக்கிரமவுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல்

### பொலிஸ்மா அதிபரிடம் முறையீடு



தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்து ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரம, பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரட்னவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ள ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரம, தனக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் குறித்து விசாரணை ☞2

# பிரிட்டனில் புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி தொடர் நடவடிக்கைகள்

## உயர் மட்ட சந்திப்புக்களில் புலம்பெயர் சமூகம் தீவிரம்



**லண்டன்,மே08**

**பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு அந்நாட்டு அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் ஆதரவைப் பெறும் கலந்துரையாடல்கள் பிரித்தானியா வாழ் புலம்பெயர் தமிழர்களால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.** ☞2


## நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா பிற்போடப்பட்டது



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது ☞2

## ரணிலுடன் எவரும் இணையமாட்டோம்

### சஜித் அணி திட்டவட்டம்



சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளனர் என வெளியாகும் தகவலை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

சஜித் அணியில் உள்ள சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர் ஐக்கிய ☞2

## விமானப்படை சிப்பாய்கள் மூவர் கைது!

கற்பிட்டி - கல்குடா பிரதேசத்தில் ஓட்டோவில் பயணித்த வியாபாரிகள் இருவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபா பணத்தைக் கப்பமாகப் பெற முயற்சித்த குற்றச்சாட்டில் விமானப்படை சிப்பாய்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமானப்படையின் பாலாவி உப பிரிவில் கடமையாற்றுகின்ற மூன்று விமானப்படை சிப்பாய்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் ☞2

## மிருசுவிலில் பிள்ளையார் கோயில் இனந்தெரியாதோரால் இடித்தழிப்பு



யாழ். தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் வீதியோரத்தில் காணப்பட்ட சிறிய பிள்ளையார் கோயில் நேற்றிரவு இனந்தெரியாதோரால் இடிக்கப்பட்டுள்ளது.

ஏ - 09 வீதியில் கொடிகாமத்துக்கும் மிருசுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிய அளவில் ☞2

## சஜித்தான் எதிர்க்கட்சித் தலைவர்

### நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றம்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது கொரோனா நெருக்கடி மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ☞2

## சஜித்தான் எதிர்க்கட்சித் ............

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தலைவர் சஜித் பிரேமதாஸவின் நடவடிக்கைகள் தொடர்பில் சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா, மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் எனவும், இதனால் ஐக்கிய மக்கள் சக்தி இரண்டுபடக்கூடும் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்விடயம் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது சம்பிக்க, மனோ, ஹக்கீம் உள்ளிட்டவர்கள் இணைந்து சஜித்துக்கு நம்பிக்கை தெரிவிக்கும் யோசனையை முன்வைத்தனர். சரத் பொன்சேகா, லக்ஸ்மன் கிரியெல்ல உள்ளிட்டவர்கள் அதனை வழிமொழிய, யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## ரணிலுடன்.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர் எனவும், நாடாளுமன்றம் வரவுள்ள ரணிலை எதிர்க்கட்சித் தலைவராக்குவதற்கு நகர்வை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையிலேயே மேற்படி தகவலை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

## விமானப்படை.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

கடந்த 6ஆம் திகதி கெப் ரக வாகனத்தில் வந்த சந்தேகநபர்கள் மூவரும் ஓட்டோவை துரத்திச் சென்று ஒரு லட்சம் ரூபா பணத்தை மிரட்டிப் பெற முயன்றனர் என்று கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த மூவரும் கைதுசெய்யப்பட்டனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இதன்படி கைதான சந்தேகநபர்கள் மூவரும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தவுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சமுதித்த சமர..........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நடத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

பயணக் கட்டுப்பாட்டுக்கு மத்தியில் கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்ற பிறந்தநாள் நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்தவர்கள் தொடர்பாகத் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கேள்விகளை எழுப்பியிருந்த நிலையிலேயே தனக்கு இவ்வாறான உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு இனந்தெரியாத நபர்களிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் வருகின்றன எனவும், தனது கேள்விகளால் சிலர் தனிப்பட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், ஆனால் ஊடகவியலாளர் என்ற ரீதியில் தான் தனது கடமையையே செய்தேன் எனவும் சமுதித்த அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தகவல் தொழில்............

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நிறுவனங்களின் இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று சில தினங்களுக்கு முன்னர் சந்தேகநபரின் பெயரில் இணையத்தளங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்தது எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டதைப் போன்று அரச இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் எதுவும் நடத்தப்பட்டிருக்கவில்லை என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இதன்படி போலிச் செய்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில் அவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமூக வலைத் தளங்கள் மற்றும் இணையத்தளங்களில் வெளியாகும் போலிச் செய்திகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சி.ஐ.டி. அதிகாரிகளை உள்ளடக்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமூக வலைத்தளத்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கூறினார். நாட்டில் உரிமையாளர்கள் யார் என்று உறுதிப்படுத்தப்படாத மற்றும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் 17 வீத மான சமூக வலைத்தளங்கள் இயங்கு வது கண்டறியப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சமூக வலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக மூன்று வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போலிச் செய்திகளை வெளியிடும் சமூக வலைத்தளக் கணக்குகள் நேர்மையாகச் செயற்படும் ஊடகவியலாளர்களைப் பாதிக்கின்றது எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## பிரிட்டனில் புலிகள்.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அண்மையில் ஈஸ்ட்ஹாம் தொகுதிக்கான தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் டைம்ஸ் அவர்களுடன் சந்திப்பினை மேற்கொண்ட குழுவினர், விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கத்துக்கு ஆதரவாக பிரிட்டன் நாடாளுமன்றில் குரல் எழுப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதான செயற்பாட்டாளர் குலசேகரம் சதீஸ் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டு பிரித்தானியாவின் கொவிட் விதிமுறைகளுக்கு உட்பட்டு மெய்நிகர் வழி ஊடாக நடை பெற்ற இக் கலந்துரையாடலில், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப் படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான சொக்கலிங்கம் யோகலிங்கம், ஆறுமுகம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் மணிவண்ணன் ஆகியோரும் மனித உரிமை செயற்பாட்டாளர்களான கீத் குலசேகரம், கரோலின் றொபின்சன், எமி டோலி ஆகியோரும் பிரதான பேச்சாளர்களாகக் கலந்து கொண்டிருந்தனர். அதே வேளை நாடு கடந்த அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களான டினேஷ் நவரத்தினம், விஜய் விவேகானந்தன், விசிதரன் சதாசிவம், விதுரா விவேகானந்தன், அனோஜன் சிவபாலன், கதா தரன் நாகராஜ், பிரசன்னா பாலச்சந்திரன், கபிலன் அன்புரத்தினம், சுபதரா வரதராசா, சிவனந்தராசா சிவதர்சன், கொளசிகன் சசிக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு எதிராக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட சட்டப் போராட்டத்தில் தடையினை மறுபரி சீலனை செய்ய உள்துறை அமைச்சிற்கு சிறப்பு தீர்ப்பாயம் 90 நாள்கள் காலக்கெடு வழங்கியிருந்தது.

இக்காலக்கெடு நெருங்கி வரும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மூலம் நீதிமன்றில் பெறப்பட்ட வெற்றியை நடை முறைப்படுத்தி அரசியல் வெற்றியாக மாற்றும் வகையிலேயே இந்த கலந்துரையாடல் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நயினாதீவு..............

(முதலாம் பக்க தொடர்ச்சி)

என ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று சூழ்நிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த ஆலய வருடாந்த மகோற்சவத்தை மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் நடத்துவதற்கு முன்னர் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இன்று காலை அவசரமாகக் கூடிய ஆலய அறங்காவலர் சபையினர் குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

## மிருசுவிலில்.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

குறித்த பிள்ளையார் ஆலயம் காணப்பட்டது.

இந்நிலையில், இன்று காலையில் மக்கள் அவதானித்தபோது ஆலயம் இடிவடைந்து காணப்பட்டது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு – மின்னஞ்சல் – kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது சபிக்கப்பட்ட தேசம்

அடுத்தடுத்து வரும் பேரிடர்களாலும், மோசமான அரச நிர்வாகம், ஊழல், தீர்க்கதரிசனமற்ற தலைமை போன்றவற்றாலும் நாடு அதலபாதாளத்தில் விழுந்து கொண்டிருக்கின்றது.

கொரோனாத் தொற்றுப் பேரிடரை எதிர்கொள்ளும் விடயத்தில் அரசு, தேர்ச்சியாக – நேர்த்தியாக – உறுதியாக – செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகின்றது.

தொற்றுப் பரவலும், கொரோனா இறப்புகளும் எண்ணிக்கை அளவில் இரட்டை இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருக்கின்றன. முடக்கமோ, ஊரடங்கோ, பயணக் கட்டுப்பாடோ எது விதித்தும் விடயம் கட்டுப்பாட்டுக்குள் வருவதாக இல்லை.

ஒரு புறம் கொரோனாப் பாதிப்பு என்றால், மறுபுறம் பயணக் கட்டுப்பாட்டினால் வெளியே வர முடியாத அன்றாடம் காய்ச்சிகளின் – நாளாந்தக் கூலித் தொழிலாளர்கள் – குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலைமை.

மக்களைத் தொடர்ந்து வீடுகளுக்குள் முடக்கி வைப்பதனால் மனக்குழப்பங்கள் ஏற்பட்டு, விபரீத முடிவுகளை எடுக்கும் சம்பவங்களும் ஆங்காங்கே தலைகாட்டுகின்றன.

கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்பட்டு அதற்குத் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டதுமே, அதனை விரைந்து சுவீகரித்து, மக்களுக்குச் செலுத்தி, காப்பரணை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற அவசிய – அவசர – நடவடிக்கை வலியுறுத்தப்பட்டது.

ஆனாலும், அந்த விடயத்தில் அரசு பெருந்தோல்வியையே கண்டிருக்கின்றது.

தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று நிதி; மற்றது சர்வதேச உறவாடல்.

தடுப்பூசிகளைத் தயாரிக்கும் நாடுகளுடன் முறையான இராஜதந்திர தொடர்பாடல்கள் உறவு நடவடிக்கைகள் இருந்தால்தான் விரைந்து ஊசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சீனவாத நோய்க்குள் சிக்கியிருக்கும் கொழும்பு, அதன் காரணமாக மேற்குலகுடனும் பிற அயல் தேசங்களுடனும் முரண்பட்டு நிற்கின்றது.

அதனால், பல நாடுகளும் இலங்கையைக் கைவிட்டு விட்ட நிலையில், சீனாவிடமிருந்து நோய்த் தடுப்பூசியைப் பெறுவதிலும் கால தாமதம் – இழுபறி நிலை – என்று சிக்கல் நீடிக்கின்றது.

இவற்றுக்கு மத்தியில் தடுப்பூசித் திட்டம் விரைந்து நிறைவு பெறும் என்றோ, மக்களுக்கு உரிய காப்பரண் கிடைக்கும் என்றோ நம்புவதற்கு இடமில்லை என்றே தோன்றுகின்றது.

விரைந்து தடுப்பூசிகளைப் பெற்று ஒரே மூச்சில் அவற்றை நாட்டு மக்கள் அனைவருக்கும் செலுத்தி முடிப்பது என்ற பகல் கனவு நிறைவேறவே மாட்டாது என்பது பெரும்பாலும் தெளிவானது.

இந்த ஆண்டு முடியும்போது கூட நாட்டில் அரைவாசிப் பேருக்கேனும் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்குமா என்பது சந்தேகம் தான் என்று விடயமறிந்த சுகாதார – மருத்துவ வட்டாரங்கள் எதிர்வு கூறுகின்றன.

விஷப் பதார்த்தங்களை ஏற்றி வந்த கப்பல், இலங்கைக் கரைக்கு அருகில் பற்றி எரிந்து நீரில் மூழ்கி வருவதால் நாட்டின் கடல் சூழல் பாதுகாப்பு மோசமாகப் பாதிக்கப்படும் பேரிடர் ஒரு புறம்.

அதற்கு மத்தியில் கொரோனா முடக்கத்தினால் வாழ்வாதாரங்களை இழந்து நிற்கும் விளிம்பு நிலை மக்களை – அல்லது வறுமைக் கோட்டில் வாழும் அன்றாடம் காய்ச்சிக் குடும்பங்களை – மிக மோசமாகப் பாதிக்கப் போகும் இன்னொரு விடயம் குறித்து முற்கூட்டிய எச்சரிக்கைகள் இப்போது வரத் தொடங்கியுள்ளன.

அது, அத்தியாவசியப் பொருள்கள் உட்பட பல விதமான பொருள்களின் விலைகள் விரைவில் கிடுகிடுவென உயரப் போகின்றன என்பதுதான்.

சிமெந்து, பால்மா, சமையல் எரிவாயு, கோழி இறைச்சி போன்றவற்றின் விலைகளே உயரப் போகின்றன என்ற தகவல்கள் கசிந்துள்ளன. போதாக்குறைக்கு உர இறக்குமதித் தடையால் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் கிடுகிடுவென உயரும் ஆபத்துப் பற்றியும் பேசப்படுகின்றது.

ஏற்கனவே கொரோனா முடக்கத்தினால் ஒரு நேர உணவுக்கே அல்லல்படும் அன்றாடத் தொழிலாளர்களின் குடும்பங்களை, ஏற்படக் கூடிய விலைவாசி உயர்வு 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக' தாக்கப் போகின்றது என்பதே நிலைமை.

ஒட்டுமொத்தமாக இலங்கை நிலைவரங்களை நோக்கும் போது, பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் கூறுகின்றமை போல இலங்கை சபிக்கப்பட்ட தேசமாக மாற்றம் பெற்றுள்ளது என்பதுதான் உண்மை.

ராஜபக்ஷக்களின் கெடுபிடி ஆட்சியில் அது தோற்றுப்போன தேசமாகவும் அடையாளப்படுத்தப்படுவது தவிர்க்க முடியாததே.

## சட்டவிரோதமாக குவிக்கப்பட்டுள்ள மணல் உப்புமாவெளி பொலிஸாரினால் முற்றுகை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள உப்புமாவெளி பிரதேசத்தில் யாழ். ஆயர் இல்ல காணியில் சட்டவிரோதமாக பாரிய அளவிலான மணல் அகழ்வு இடம்பெறுவதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டது.



இந்த நிலையில் குறித்த இடத்துக்கு முல்லைத்தீவு பொலிஸாரை அழைத்த ஊடகவியலாளர்கள் இவ்வாறு சட்டவிரோதமாக இடம்பெறும் மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாரிடம் வினவியபோது பொலிஸாருக்கு குறித்த சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் தெரியாது எனத் தெரிவித்தனர்.

தொடர்ந்து குறித்த சட்டவிரோதமாக குவிக்கப்பட்டுள்ள மணலைப் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. காணி உரிமையாளர்கள் அயலவர்களிடம் சட்டவிரோத மணல் குவிப்பை செய்தவர்கள் யார் என்பது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ந்து நீதிமன்றை நாடி உரிய திணைக்களங்களுடன் இணைந்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இதுவரை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 35 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகளை இலங்கைக்கு அனுப்பியது சுவிட்ஸர்லாந்து

இலங்கைக்கு 35 லட்சம் ரூபா மதிப்புள்ள மருத்துவப் பொருள்களை சுவிட்ஸர்லாந்து அனுப்பியுள்ளது.

அதன்படி, 5 லட்சம் அன்டிஜென் சோதனை கருவிகள், 50 வென்டிலேட்டர்கள், 150 ஒக்ஸிஜன் செறிவூட்டிகள் மற்றும் சோதனைப் பொருள்கள் உள்ளிட்ட மருத்துவ பொருள்களையே இவ்வாறு அனுப்பியுள்ளது.

இலங்கையின் கடுமையான பொது சுகாதார நிலைமைக்கு பதிலளிக்கும் விதமாகவும், கொவிட் - 19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு உதவும் வகையிலும் இவ்வாறு உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

இலங்கை அதிகாரிகள் வழங்கிய தேவைகளின் அடிப்படையில், சுவிட்ஸர்லாந்து வழங்கக்கூடிய பொருள்களின் பட்டியல் மத்திய பாதுகாப்பு, சிவில் பாதுகாப்பு மற்றும் விளையாட்டுத் துறை மற்றும் மத்திய உள்துறை திணைக்களத்தின் நெருக்கமான ஒத்துழைப்புடன் வரையறுக்கப்பட்டது.

இதனையடுத்து, ஒரு விமானம் இன்று சூரிச்சிலிருந்து 16 தொன் பொருள்களுடன் இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்தப் பொருள்கள் இலங்கை சுகாதார அமைச்சின் பிரதிநிதிகளால் கொழும்பில் பெறப்பட்டு பின்னர் வெவ்வேறு இடங்களுக்கு விநியோகிக்கப்படும்.

இலங்கையில் உள்ள சுவிஸ் தூதரகம் உள்ளூர் அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளதால், பொருள்கள் நியாயமான முறையில் மற்றும் மனிதாபிமான கொள்கைகளுக்கு ஏற்ப விநியோகிக்கப்படுவதை உறுதி செய்ய முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## 3 லட்சத்து 53 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு முழுமையாக தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன

இலங்கையில் இதுவரை 3 லட்சத்து 53 ஆயிரத்து 789 பேருக்கு முழுமையாகத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று மட்டும் ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ரா ஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் மேலும் 487 பேருக்கு செலுத்தப்பட்டதாவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மேலும் 19 ஆயிரத்து 567 பேருக்கு நேற்று சினோபோர்ம் தடுப்பூசி செலுத்தப்பட்டதாகவும் இதனை அடுத்து குறித்த தடுப்பூசியை பெற்றுக் கொண்டோரின் மொத்த எண்ணிக்கை 9 லட்சத்து 89 ஆயிரத்து 574 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் ரஷ்யாவின் ஸ்பூட்னிக் வி தடுப்பூசி இதுவரை 64 ஆயிரத்து 986 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## சீரற்ற காலநிலை சாவு 18 ஆக உயர்வு

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது.

அத்தோடு, 5 பேர் காயமடைந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதேநேரம், 10 மாவட்டங்களின் 87 பிரதேசங்களிலுள்ள 52 ஆயிரத்து 695 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 7 ஆயிரத்து 882 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிப்புக்குள்ளானவர்களில் 5 ஆயிரத்து 360 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 806 பேர் 106 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 5 ஆயிரத்து 710 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 164 பேர் தங்களது உறவினர்களது வீடுகளில் தஞ்சமடைந்திருக்கின்றனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் தென்மேற்கு பகுதியில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை இன்றும் நாளையும் தற்காலிகமாக அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 – 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.



# கொரோனாவுக்கு எதிரான தமிழக மக்களின் எதிர்ப்பாற்றல் குறைந்ததா?

## இரண்டாம் கட்ட ஆய்வு முடிவுகள் பற்றிய தரவுகள் வெளியாகின

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் இரண்டாம் கட்டமாக நடத்தப்பட்ட சீரோ ஆய்வில் மொத்த மக்கள் தொகையில் 23 சதவீதத்தினருக்கு கொரோனா எதிர்ப்பாற்றல் இருப்பது தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டு ஒக்டோபர் - நவம்பர் காலப்பகுதியில் நடத்தப்பட்ட முதற் கட்ட சீரோ ஆய்வில் 31 சதவீதத்தினருக்கு எதிர்ப்பாற்றல் இருந்தமை அறியப்பட்டிருந்தது. தற்போதைய ஆய்வின் அதிலிருந்து 8 சத வீதம் குறைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தமிழக பொதுச்சுகாதார மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் நடத்திய இந்த ஆய்வில், சென்னையைத் தவிர்த்து பிற மாவட்டங்களில் 22,904 பேருக்கு பரிசோதனை நடத்தப்பட்டது. அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டத்தில் 49 சதவீதத்தினருக்கும், குறைந்த பட்சமாக நாகப்பட்டினத்தில் 9 சதவீதத்தினருக்கும், செங்கல்பட்டில் 43 சதவீதத்தினருக்கும், காஞ்சிபுரத்தில் 38 சதவீதத்தினருக்கும் கொரோனா எதிர்ப்பாற்றல் இருப்பது தெரியவந்துள்ளது. சென்னையில் 5,316 பேருக்கு கொரோனா எதிர்ப்பாற்றல் இருந்தமை ஆய்வில் தெரியவந்தது.

கொரோனா எதிர்ப்பாற்றல் சதவீதம் குறைந்தமை குறித்து, 'புதுவகையான கொரோனா வைரஸ்களால் இந்த சதவீதம் குறைந்திருக்கலாம்' என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். முதல் கொரோனா அலை உச்சக்கட்டத்தில் இருந்தபோது சீரோ ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது, 22,690 பேருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் 6,995 பேருக்கு கொரோனா எதிர்ப்பாற்றல் இருப்பது தெரியவந்தது. மூன்றாம் கட்ட சீரோ ஆய்வு ஜூலை -ஒகஸ்ட் காலப்பகுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தடுப்பூசிகளை மத்திய அரசே வாங்கி விநியோகிக்கும்

## மோடியின் அறிவிப்புக்கு ஸ்டாலின் வரவேற்பு

மாநிலங்களுக்கு இலவசமாக கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்ற இந்தியப் பிரதமர் மோடியின் அறிவிப்பை தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்றுள்ளார். 'தடுப்பூசிக் கொள்கையில் மத்திய அரசின் முந்தைய நிலையை மாற்றிக் கொண்டதற்கு பாராட்டுகிறேன்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளில் 75 சதவீதத்தைக் கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு இலவசமாக வழங்கும் பிரதமரின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளார். தடுப்பூசிக்கான பதிவு, நிர்வாகம் மற்றும் நடைமுறைப் படுத்துதல் மாதிரியானவற்றை மாநில அரசிடம் விட்டுவிட வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா இரண்டாவது அலையின் தாக்கம் மெல்லக் குறைந்து வரும் நிலையில் தொலைக்காட்சி வாயிலாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே உரையாற்றினார். அப்போது இந்தியாவில் கொவேக்சின், கொவிஷீல்ட் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்ட நிலையில், மேலும் மூன்று தடுப்பூசிகள் மருத்துவப் பரிசோதனையின் இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாக அவர் தெரிவித்தார். வரும் நாள்களில் கொரோனாத் தடுப்பூசி விநியோகம் அதிகரிக்கப்படும் என்று பேசிய மோடி, தடுப்பூசிக்காக வகுக்கப்பட்ட



புதிய கொள்கை வரும் 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது எனவும் தெரிவித்தார். மே மாதம் முதலே தடுப்பூசி விவகாரத்தில் மாநிலங்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப் பட்டதாகவும், ஆனால், கொள்முதல் விவகாரத்தில் மாநில அரசுகளுக்கு பிரச் சினை ஏற்பட்டதால் புதிய கொள்கை வகுக்கப் பட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதன்படி கொரோனாத் தடுப்பூசியை மத்திய அரசே கொள்முதல் செய்து, அனைத்து மாநிலங்களுக்கும் இலவசமாக வழங்கும் என்றும், எனவே, தடுப்பூசிக்காக மாநில அரசுகள் இனி தங்கள் பணத்தைச் செலவிட வேண்டிய தேவையில்லை என்றும் பிரதமர் மோடி அறிவித்திருக்கிறார். மாநிலங்களுக்கு வழங்கியது போக எஞ்சிய 25 சதவிகித தடுப் பூசிகளை தனியார் மருத்துவமனைகள் நேரடியாக தயாரிப்பு நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் மோடி கூறியிருக்கிறார்.



மும்பையில் கட்டுப்பாட்டு நேர அட்டவணையில் இயங்குவதற்கு

# விற்பனை மற்றும் சேவை வழங்குவோருக்கு அனுமதி

மும்பையில் இரண்டு மாத கொரோனாத் தொற்று ஊரடங்குக்குப் பின்னர் நேற்று முதல் மீண்டும் கடைகளும் நிறுவனங்களும் கட்டுப்பாடுகளுடன் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. முடி திருத்தும் நிலையங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் அத்தியாவசியப் பிரிவுக்குள் உள்ளடங்காத பொருள்களை விற்கும் கடைகள் மற்றும் உணவகங்களும் குறித்த நேரப் பகுதிகளுக்குள் இயங்குவதற்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மகாராஷ்டி அரசின் 'பிரேக் த செயின்' வழிகாட்டுதலின் கீழ் வெளியிடப்பட்ட புதிய உத்தரவின் படி, அத்தியாவசியப் பொருள்களை விற்கும் கடைகள் நகரத்தில் அனைத்து நாள்களிலும் மாலை 4 மணி வரை திறந்திருக்கலாம். ஏனைய விற்பனை நிலையங்கள் வார நாள்களில் மாலை 4 மணி வரை திறந்திருக்கலாம்.

உணவகங்களைப் பொறுத்த வரை, வார நாள்களில் மாலை 4 மணி வரை 50 சதவீத இருக்கை வசதியுடன் உணவருந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், பொதி மற்றும் வீட்டு விநியோக சேவைகள் மட்டுமே அனுமதிக் கப்படும்.

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனையாகும் கடைகள் தவிர ஏனைய விற்பனை நிலையங்களும் உணவகங்களும் மூடப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.



# மேட்டூர் அணை நீர் திறப்பு நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்கிறார்

மேட்டூர் அணை நீர் திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக ஜூன் 12 ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திருவாரூர் செல்லவுள்ளார். சாகுபடிக்காக மேட்டூர் அணைத் தண்ணீரைத் திறந்துவைத்தப் பின்னர் அவர் கொரோனாத் தடுப்புப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

ஆண்டுதோறும் ஜூன் 12 ஆம் திகதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவது வழமையாக உள்ளது. மேட்டூர் அணை வரலாற்றில் இது வரை 17 ஆண்டுகள் குறிப்பிட்ட நாளான ஜூன் 12 இல் காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 18 ஆவது ஆண்டாக குறிப்பிட்ட நாளில் டெல்டா பாசனத்திற்குத் தண்ணீர் திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது

# கொவேக்சினை விட கொவிஷீல்ட் தடுப்பூசியில் அதிக நோய் எதிர்ப்புத்திறன்?

## சுகாதாரப் பணியாளர்களிடம் மேற்கொண்ட முதல் கட்ட ஆய்வில் தெரியவந்தது

இந்தியா முழுவதும் தற்போது 23 கோடிக்கு மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசிகளைச் செலுத்திய பின்னர் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இரண்டு டோஸ்களைச் செலுத்திய பின்னர் கொவிஷீல்ட், கொவேக்சின் இரண்டுமே சிறந்த பலன்களைத் தருகின்றன என நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். அதே வேளை, கோவிஷீல்டில் கூடுதலான நோய் எதிர்ப்புத் தன்மை உருவாகின்றமையும் முதல் கட்ட ஆய்வின் தரவுகள் மூலம் அறியமுடிவதாகக் கூறப்படுகிறது.

13 மாநிலங்களைச் சேர்ந்த 515 சுகாதாரப் பணியாளர்களிடம் இது தொடர்பாக ஆய்வு செய்யப் பட்டது. இவர்களில் 425 பேருக்கு கொவிஷீல்டும், 90 பேருக்கு கொவேக்சினும் செலுத்தப்பட்டன. இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்ட 21 நாள் முதல் 36 நாட்களுக்குள் சிறப்பான நோய் எதிர்ப்புத் திறன் உருவானது கண்டறியப்பட்டது.

கொவிஷீல்ட் தடுப்பூசியில் 98 சதவீதமும், கொவேக்சின் தடுப்பூசியில் 80 சதவீதமும் நேர்த்திறன் தன்மை கண்டறியப்பட்டுள்ளது. இரு தடுப்பூசிகளுமே கொரோனா நோயின் தீவிரத்தைக் குறைத்திருப்பதோடு உயிரிழப்பு ஏற்படுவதையும் தடுத்திருக்கின்றன. இந்த ஒப்பீடு, இந்த ஆய்வின் முதல்கட்ட நிலை என்பதால் மருத்துவத்துறையினர் இதனை ஒரு வழிகாட்டலாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். அடுத்த கட்ட ஆய்வு முடிவுகள் பெறப்பட்டதும் அதிகாரப்பூர்வமான அறிவித்தல்கள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# கொரோனாவுக்கு எதிரான தமிழக மக்களின் எதிர்ப்பாற்றல் குறைந்ததா?

## இரண்டாம் கட்ட ஆய்வு முடிவுகள் பற்றிய தரவுகள் வெளியாகின

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் இரண்டாம் கட்டமாக நடத்தப்பட்ட சீரோ ஆய்வில் மொத்த மக்கள் தொகையில் 23 சதவீதத்தினருக்கு கொரோனா எதிர்ப்பாற்றல் இருப்பது தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டு ஒக்டோபர் - நவம்பர் காலப்பகுதியில் நடத்தப்பட்ட முதற் கட்ட சீரோ ஆய்வில் 31 சதவீதத்தினருக்கு எதிர்ப்பாற்றல் இருந்தமை அறியப்பட்டிருந்தது. தற்போதைய ஆய்வின் அதிலிருந்து 8 சத வீதம் குறைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தமிழக பொதுச்சுகாதார மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் நடத்திய இந்த ஆய்வில், சென்னையைத் தவிர்த்து பிற மாவட்டங்களில் 22,904 பேருக்கு பரிசோதனை நடத்தப்பட்டது. அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டத்தில் 49 சதவீதத்தினருக்கும், குறைந்த பட்சமாக நாகப்பட்டினத்தில் 9 சதவீதத்தினருக்கும், செங்கல்பட்டில் 43 சதவீதத்தினருக்கும், காஞ்சிபுரத்தில் 38 சதவீதத்தினருக்கும் கொரோனா எதிர்ப்பாற்றல் இருப்பது தெரியவந்துள்ளது. சென்னையில் 5,316 பேருக்கு கொரோனா எதிர்ப்பாற்றல் இருந்தமை ஆய்வில் தெரியவந்தது.

கொரோனா எதிர்ப்பாற்றல் சதவீதம் குறைந்தமை குறித்து, 'புதுவகையான கொரோனா வைரஸ்களால் இந்த சதவீதம் குறைந்திருக்கலாம்' என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். முதல் கொரோனா அலை உச்சக்கட்டத்தில் இருந்தபோது சீரோ ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது, 22,690 பேருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் 6,995 பேருக்கு கொரோனா எதிர்ப்பாற்றல் இருப்பது தெரியவந்தது. மூன்றாம் கட்ட சீரோ ஆய்வு ஜூலை -ஒகஸ்ட் காலப்பகுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தடுப்பூசிகளை மத்திய அரசே வாங்கி விநியோகிக்கும்

## மோடியின் அறிவிப்புக்கு ஸ்டாலின் வரவேற்பு



மாநிலங்களுக்கு இலவசமாக கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்ற இந்தியப் பிரதமர் மோடியின் அறிவிப்பை தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்றுள்ளார். 'தடுப்பூசிக் கொள்கையில் மத்திய அரசின் முந்தைய நிலையை மாற்றிக் கொண்டதற்கு பாராட்டுகிறேன்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளில் 75 சதவீதத்தைக் கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு இலவசமாக வழங்கும் பிரதமரின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளார். தடுப்பூசிக்கான பதிவு, நிர்வாகம் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மாதிரியானவற்றை மாநில அரசிடம் விட்டுவிட வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா இரண்டாவது அலையின் தாக்கம் மெல்லக் குறைந்து வரும் நிலையில் தொலைக்காட்சி வாயிலாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே உரையாற்றினார். அப்போது இந்தியாவில் கொவேக்சின், கொவிஷீல்ட் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்ட நிலையில், மேலும் மூன்று தடுப்பூசிகள் மருத்துவப் பரிசோதனையின் இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாக அவர் தெரிவித்தார். வரும் நாள்களில் கொரோனாத் தடுப்பூசி விநியோகம் அதிகரிக்கப்படும் என்று பேசிய மோடி, தடுப்பூசிக்காக வகுக்கப்பட்ட புதிய கொள்கை வரும் 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது எனவும் தெரிவித்தார். மே மாதம் முதலே தடுப்பூசி விவகாரத்தில் மாநிலங்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டதாகவும், ஆனால், கொள்முதல் விவகாரத்தில் மாநில அரசுகளுக்கு பிரச் சினை ஏற்பட்டதால் புதிய கொள்கை வகுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதன்படி கொரோனாத் தடுப்பூசியை மத்திய அரசே கொள்முதல் செய்து, அனைத்து மாநிலங்களுக்கும் இலவசமாக வழங்கும் என்றும், எனவே, தடுப்பூசிக்காக மாநில அரசுகள் இனி தங்கள் பணத்தைச் செலவிட வேண்டிய தேவையில்லை என்றும் பிரதமர் மோடி அறிவித்திருக்கிறார். மாநிலங்களுக்கு வழங்கியது போக எஞ்சிய 25 சதவிகித தடுப்பூசிகளை தனியார் மருத்துவமனைகள் நேரடியாக தயாரிப்பு நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் மோடி கூறியிருக்கிறார்.



## மும்பையில் கட்டுப்பாட்டு நேர அட்டவணையில் இயங்குவதற்கு

# விற்பனை மற்றும் சேவை வழங்குவோருக்கு அனுமதி

மும்பையில் இரண்டு மாத கொரோனாத் தொற்று ஊரடங்குக்குப் பின்னர் நேற்று முதல் மீண்டும் கடைகளும் நிறுவனங்களும் கட்டுப்பாடுகளுடன் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. முடி திருத்தும் நிலையங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் அத்தியாவசியப் பிரிவுக்குள் உள்ளடங்காத பொருள்களை விற்கும் கடைகள் மற்றும் உணவகங்களும் குறித்த நேரப் பகுதிகளுக்குள் இயங்குவதற்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மகாராஷ்டி அரசின் 'பிரேக் த செயின்' வழிகாட்டுதலின் கீழ் வெளியிடப்பட்ட புதிய உத்தரவின் படி, அத்தியாவசியப் பொருள்களை விற்கும் கடைகள் நகரத்தில் அனைத்து நாள்களிலும் மாலை 4 மணி வரை திறந்திருக்கலாம். ஏனைய விற்பனை நிலையங்கள் வார நாள்களில் மாலை 4 மணி வரை திறந்திருக்கலாம்.

உணவகங்களைப் பொறுத்த வரை, வார நாள்களில் மாலை 4 மணி வரை 50 சதவீத இருக்கை வசதியுடன் உணவருந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், பொதி மற்றும் வீட்டு விநியோக சேவைகள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனையாகும் கடைகள் தவிர ஏனைய விற்பனை நிலையங்களும் உணவகங்களும் மூடப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.



# மேட்டூர் அணை நீர் திறப்பு நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்கிறார்

மேட்டூர் அணை நீர் திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக ஜூன் 12 ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திருவாரூர் செல்லவுள்ளார். சாகுபடிக்காக மேட்டூர் அணைத் தண்ணீரைத் திறந்துவைத்தப் பின்னர் அவர் கொரோனாத் தடுப்புப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

ஆண்டுதோறும் ஜூன் 12 ஆம் திகதி மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவது வழமையாக உள்ளது. மேட்டூர் அணை வரலாற்றில் இது வரை 17 ஆண்டுகள் குறிப்பிட்ட நாளான ஜூன் 12 இல் காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 18 ஆவது ஆண்டாக குறிப்பிட்ட நாளில் டெல்டா பாசனத்திற்குத் தண்ணீர் திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது

# கொவேக்சினை விட கொவிஷீல்ட் தடுப்பூசியில் அதிக நோய் எதிர்ப்புத்திறன்?

## சுகாதாரப் பணியாளர்களிடம் மேற்கொண்ட முதல் கட்ட ஆய்வில் தெரியவந்தது

இந்தியா முழுவதும் தற்போது 23 கோடிக்கு மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசிகளைச் செலுத்திய பின்னர் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இரண்டு டோஸ்களைச் செலுத்திய பின்னர் கொவிஷீல்ட், கொவேக்சின் இரண்டுமே சிறந்த பலன்களைத் தருகின்றன என நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். அதே வேளை, கோவிஷீல்டில் கூடுதலான நோய் எதிர்ப்புத் தன்மை உருவாகின்றமையும் முதல் கட்ட ஆய்வின் தரவுகள் மூலம் அறியமுடிவதாகக் கூறப்படுகிறது.

13 மாநிலங்களைச் சேர்ந்த 515 சுகாதாரப் பணியாளர்களிடம் இது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இவர்களில் 425 பேருக்கு கொவிஷீல்டும், 90 பேருக்கு கொவேக்சினும் செலுத்தப்பட்டன. இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்ட 21 நாள் முதல் 36 நாட்களுக்குள் சிறப்பான நோய் எதிர்ப்புத் திறன் உருவானது கண்டறியப்பட்டது.

கொவிஷீல்ட் தடுப்பூசியில் 98 சதவீதமும், கொவேக்சின் தடுப்பூசியில் 80 சதவீதமும் நேர்த்திறன் தன்மை கண்டறியப்பட்டுள்ளது. இரு தடுப்பூசிகளுமே கொரோனா நோயின் தீவிரத்தைக் குறைத்திருப்பதோடு உயிரிழப்பு ஏற்படுவதையும் தடுத்திருக்கின்றன. இந்த ஒப்பீடு, இந்த ஆய்வின் முதல்கட்ட நிலை என்பதால் மருத்துவத்துறையினர் இதனை ஒரு வழிகாட்டலாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். அடுத்த கட்ட ஆய்வு முடிவுகள் பெறப்பட்டதும் அதிகாரப்பூர்வமான அறிவித்தல்கள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# மட்டக்களப்பில் இன்று ஆரம்பமானது கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று முதல் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகியது.

மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்த தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ந. மயூரன், மற்றும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிப்பாளர் வைத்தியர் இ. உதயகுமார், இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். குறித்த தடுப்பூசிகளை மக்களுடன் நேரடி தொடர்பினை பேணும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள், அதிகளவில் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் முதற்கட்டமாக 1,000 பேருக்கான கொவிட் தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் இன்று காலை மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலை மற்றும் ஏறாவூர் பொலிஸ் நிலையம் ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்டன என மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இன்று காலை, ஆரம்பித்து வைக்கப்பட்டன. குறித்த நிலையத்தில் முதற்கட்டமாக 700 கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

குறித்த தடுப்பூசி திட்டத்தில் முதற்கட்டமாக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், மாநகர உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மக்களுடன் நேரடித் தொடர்பினை பேணுபவர்களுக்கு ஏற்றப்படுகின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை பார்வையிட வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் குறித்த அலுவலகங்களின் ஊடாக ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் மக்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணா கரன் தெரிவித்தார்.

# சம்மாந்துறை சுகாதார பிரிவில் இதுவரை 112 பேருக்கு கொரோனா

வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை எல்லைக்குட்பட்ட சம்மாந்துறை பிரதேசத்தில் கடந்த ஓரிரு நாள்களில் நடமாடும் வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் 136 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது அதில் ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம். கபீர் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேசத்தில் மூன்றாம் அலையின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினம் வரை 12 கிராம சேவையாளர் பிரிவுகளில் மொத்தமாக 112 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்களில்சிலர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளமையுடன் ஒரு சில மரணங்களும் சம்பவித்துள்ளன.

எமது பிரதேசத்தின் நிலையறிந்து நடமாடும் வியாபாரிகளிடம் பொருள்களை கொள்வனவு செய்யும் போது வியாபாரிகள் சுகாதார நடைமுறையை பின்பற்றாமல் காணப்பட்டால் பொருள்களை பொதுமக்கள் கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் மக்களை கேட்டுக் கொண்டார். மேலும் இவ்வாறு நிலைமை தொடருமாயின் எமது சம்மாந்துறை பிரதேசத்தை முடக்கவேண்டிய நிலை வரும் எனவும் தெரிவித்தார்.



# கர்ப்பிணிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில், கொரோனாத் தொற்றுக் காரணமாக கர்ப்பிணிப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ள நிலையில், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கர்ப்பிணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், 68 கர்ப்பிணிகளுக்கு, நேற்று பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதாகவும் அதன் மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் வாழைச்சேனை சுகா தார வைத்திய அதிகாரி தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தெரிவித்தார். இந்தப் பரி சோதனையில் மேற்பார்வை பொதுச் சுகா தார பரிசோதகர் ஆர்.நிதிராஜ், சுகாதாரப் பரி சோதகர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

# குச்சவெளி ஜம்மியத்துல் உலமா சபையின் நிவாரண உதவிதிட்டம் அங்குராப்பணம்



**(எப்.முபாரக் )**

குச்சவெளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட புடவைக்கட்டு தொடக்கம் இக்பால் நகர் வரையான பகுதிகளை உள்ளடக்கிய குச்சவெளி ஜம்மியத்துல் உலமா சபையினால் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படுகின்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட நிவாரண உதவிதிட்ட குழு திங்கட்கிழமை குச்ச வெளி பிரதேச சபையின் தலைமையகத்தில் வைத்து புடவைக் கட்டுதொடக்கம் இக்பால்நகர் வரையான உலமாக்களின் பங்கேற்புடன் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ முபாறக் கினால் இந்த நிவாரண உதவி திட்ட குழு அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அத்துடன் இந்த நிவாரண உதவி குழுவுக்கு தவிசாளர் தனது சொந்த நிதியில் இருந்து ரூபா ஐம்பதாயிரத்திற்கான காசோலையை முதற் கட்டமாக குழுவினரிடம் வழங்கி வைத்ததுடன் மேலும் தன்னால் இயலுமான உதவிகளையும் வழங்குவேன் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் குச்சவெளி பிரதேச ஜம்மியத்துல் உலமா சபை தலைவர் அஷ்ெய்க் அப்துல் அஸீஸ் மற்றும் குச்சவெளி பிரதேச சபையின் உப தவிசாளர் எம்.சாஜித் மற்றும் உறுப்பினர்கள் ஏ.சி.எம்.மீசான், எஸ்.ஏ.சி.எம். நசார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு நகருக்குள் நுழைய தீவிர சோதனை

பயணக்கட்டுப்பாட்டு காலத்தில் தேவையற்ற வகையில் மட்டக்களப்பு நகருக்குள் நுழைய முற்பட்டோர் திருப்பியனுப்பி வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரேனா தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் பயணக் கட்டுப்பாட்டினை மீறும் வகையில் சிலர் செயற்பட்டுவருகின்றனர். இவர்களை கண்டறியும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸாரினால் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் நேற்று பிற்பகல் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி பி.எஸ்.டி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன் போது தேவையற்ற வகையில் மட்டக்களப்பு நருக்குள் பயணத்தடையினையும் மீறி வருகைதந்தோர் திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.



## சம்பள ஒப்பந்தத்தில் கையொப்பமிடாமலே

# இங்கிலாந்து செல்லும் இலங்கைக் கிரிக்கெட் அணி




இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடர் ஜூன் 23 அன்றும் ரி-20 தொடர் ஜூன் 29 அன்றும் தொடங்கவுள்ளன. இங்கிலாந்துச் சுற்றுப்பயணத்துக்காக இலங்கை அணி இரு நாள்களில் இங்கிலாந்துக்குப் புறப்படவுள்ள நிலையில் புதிய சம்பள ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலே அவர்கள் பயணிக்கவுள்ளனர். அவர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்பும்போது சம்பள விகிதத்துக்கான புள்ளியிடல் மாதிரி வரைபுகள் தயாராக இருக்குமென்று இலங்கைக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் கிரிக்கெட் வீரர்களுக்கான புதிய சம்பள ஒப்பந்த முறைமையை இலங்கைக் கிரிக்கெட்சபை அறிவித்தது. அந்தச் சபையின் தொழில்நுட்பக் குழுத்தலைவர் அரவிந்த டி சில்வா மற்றும் இலங்கைக் கிரிக்கெட் அணி யின் புதிய இயக்குநர் டொம் மூடி ஆகியோர் இந்த புள்ளிகள் அடிப்படையிலான சம்பள ஒப்பந்தத்தை அறிமுகம் செய்துள்ளனர்.

புதிய ஒப்பந்த விதிமுறைகளின்படி வீரர்களின் பங்களிப்பு மற்றும் உடற்தகுதிகளின் அடிப்படையில் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும் எனத் தெரிகிறது. 2019 முதல் சிறப்பாக விளையாடியதற்காக 50 சதவீதமும் உடற்தகுதிக்கு 20 சதவீதமும் தலைமைப்பண்பு, தொழில்முறை, வருங்காலத் திறமை, அணிக்கான பங்களிப்பு ஆகியவற்றுக்காக 10 சதவீதமுமாக சம்பளம் வகுக்கப்பட்டு வழங்கப்படும் என வீரர்களுக்கு வழங்கப்பட்ட புதிய ஒப்பந்தம் தெரிவிப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தப் புதிய நடைமுறைக்கு அணித் தலைவர் குசல் பெரேரா உள்ளிட்ட இலங்கை கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இதற்கு முன்பு 24 வீரர்கள் ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில் தற்போது இதன் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளது. 38 வீரர்களும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில், 'வீரர்களுக்குப் புள்ளிகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை இல்லை. அதனால் நாங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை' என தெரிவித்திருந்தனர். இதன் பின்னராக நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையிலேயே இங்கிலாந்துக்குச் செல்லும் முன்னர் வீரர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடமாட்டர்கள் என்றும் அவர்கள் நாட்டுக்குத் திரும்பும்போது சம்பளம் வழங்கப்படும் முறைமைக்கான தெளிவான திட்டமிடல் வரைபு அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் இலங்கைக் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஒலி ரொபின்சனின் சர்ச்சைக்குரிய டுவீட் விவகாரம் இந்திய வீரர் அஷ்வின் ஆறுதல் கருத்து



'ஒலி ரொபின்சனுக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்பாக உண்மையாகவே வருத்தப்படுகிறேன்' என்று இந்திய கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஷ்வின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் அவர் வெளியிட்ட பதிவில், 'சில ஆண்டுகளுக்கு முன்பு எதிர்மறையான கருத்துக்களை அவர் பதிவிட்டதற்காக இப்போது தண்டனை கிடைத்திருக்கிறது. கிரிக்கெட் விளையாட அவர் தடை செய்யப்பட்டிருக்கிறார். நான் உண்மையாகவே ரொபின்சனுக்காக வருத்தப்படுகிறேன். ஒரு அறிமுக வீரராக டெஸ்ட்டில் அடிவைத்து சிறப்பான தொடக்கத்தை அவர் கொடுத்திருந்தார். இந்தத் தடையின் மூலம் எதிர்காலம் சமூக வலைத்தளங்களின் கைகளில் இருக்கிறது என்றே தெரிகிறது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று நிறைவடைந்துள்ளது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் ஒலி ரொபின்சன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இது அவருக்கு முதல் சர்வதேசப் போட்டி. இந்தப் போட்டியில் சிறப்பாக பந்து வீசிய ரொபின்சனுக்குப் பாராட்டுக் கிடைத்தாலும், அவர் சர்ச்சையிலும் சிக்கினார்.

இதற்குக் காரணம், அவர் 8 ஆண்டுகளுக்கு முன்பு டுவீட் செய்த விடயம் என தெரியவந்தது.

8 வருடங்களுக்கு முன்பு சில டுவீட்களை பதிவிட்டிருந்த ரொபின்சன், அதில் இனவெறியைத் தூண்டும் விதமாகவும், பாலியல் ரீதியாக சில வார்த்தைகளையும் பதிவு செய்திருந்தார். அதுதொடர்பாக, அறியாத வயதில் தெரியாமல் செய்த தவறு அது. மற்றப்படி நான் நிறவெறி கொண்டவனோ, பாலியல் ரீதியான மோசமான எண் ணங்களையுடையவனோ அல்லன் என்று ரொபின்சன் விளக்கமளித்தபோதும் அதனை ஏற்க மறுத்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை, அவருக்கு இடைக்காலத் தடையை விதித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட், கிரிக்கெட் என்பது தனியே விளையாட்டு மட்டுமல்ல. அது பல விடயங்களை உள்ளடக்கியது. ரொபின்சன் பலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்.

## நடால், ஜோகோவிச் காலிறுதிக்குத் தகுதி!



பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடரின் காலிறுதிச் சுற்றுக்கு முன்னணி வீரர்களான நடாலும் ஜோகோவிச்சும் தகுதிபெற்றுள்ளனர்.

பிரெஞ்ச் ஓபின்பட்டத்தை 13 முறை வென்ற நடால், நான்காவது சுற்றில் 19 வயது சின்னரை 7-5, 6-3, 6-0 என நேர் செட்களில் தோற்கடித்து காலிறுதிக்குத் தகுதி பெற்றார். இதன்மூலம் பிரெஞ்ச் ஓபின் கிராண்ட்ஸ்லாம் தொடரில் 15 முறை காலிறுதிக்கு முன்னேறிய சாதனையைப் படைத்துள்ளார் நடால்.

தனது நான்வது சுற்றில் இத்தாலியின் முசெட்டியை 6-7(7), 6-7(2), 6-1, 6-0, 4-0 என்ற செட் கணக்கில் போராடி வென்றார் ஜோகோவிச். இறுதி செட்டில் காயம் காரணமாக முசெட்டி போட்டியிலிருந்து விலகினார். பிரெஞ்ச் ஓபின் தொடரில் தொடர்ந்து 12 ஆவது முறையாகக் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார் ஜோகோவிச் என்பது குறிப்பிடத்தக்கது.



## இந்தியா–இலங்கை கிரிக்கெட் தொடர் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டது

இந்தியா, இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான போட்டித்தொடருக்கான கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, தலா மூன்று ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளும், ரி-20 போட்டிகளும் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளன. முதலாவது ஒரு நாள் சர்வதேசப் போட்டி வருகிற ஜூலை 13 ஆம் திகதியும் இரண்டாவது போட்டி 16 இலும், மூன்றாவது போட்டி 18 இலும் நடைபெறவுள்ளன. இதன்பின்பு, ரி-20 தொடர் ஜூலை 21 முதல் 25 வரை நடைபெறவிருக்கிறது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியிலும் இங்கிலாந்து டெஸ்ட் தொடரிலும் விளையாடும் வீரர்கள் இந்தத் தொடரில் விளையாடும் வாய்ப்பு இல்லாததால் தனியானதொரு அணி அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு முன்னாள் இந்திய அணித்தலைவரான ராகுல் டிராவிட் தலைமைப் பயிற்சியாளராக செயல்படுவார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பிரெஞ்ச் ஓபின் தொடரையடுத்து பெர்லின் தொடரிலிருந்தும் விலகினார் ஒசாகா



இதுவரை நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஒசாகா, சமீபத்தில் 2020 யு.எஸ். ஓபின் மற்றும் 2021 ஆஸ்திரேலிய ஓபின் பட்டங்களை வென்றிருந்தார். ஊடகவியலாளர் சந்திப்பினால் தனக்கு மன அழுத்தம் ஏற்படுவதால் பிரெஞ்ச் ஓபின் தொடரில் அவர்களைச் சந்திப்பதைத் தவிர்ப்பதாக அவர் தெரிவித்திருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரெஞ்ச் ஓபின் போட்டித்தொடரின் நிர்வாகம், ஒசாகாவின் நடவடிக்கைக்கு 15,000 டொலர் அபராதம் விதித்தது. முதல் சுற்று வெற்றிக்குப் பிறகு செய்தியாளர் சந்திப்பைத் தவிர்த்த தால் இந்த நிலை அவருக்கு ஏற்பட்டது.

மேலும் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பைத் தவிர்த்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்றும் பிரெஞ்ச் ஓபின் உள்ளிட்ட நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளின் நிர்வாகங்களும் எச்சரித்தன. இதைய டுத்து, தன்னால் கவனச்சிதறல் ஏற்பட வேண்டாம் என்று கூறி இந்த வருட பிரெஞ்ச் ஓபின் தொடரிலிருந்து விலகினார் ஒசாகா.

மன அழுத்தம் ஏற்படுவதால் செய்தியாளர் சந்திப்பைத் தவிர்க்க நினைத்தேன். தொடரிலிருந்து நான் விலகுவதால் மற்ற வீரர்கள் விளையாட்டில் கவனம் செலுத்த முடியும். யு.எஸ். ஓபின் 2018 இலிருந்து நான் மன அழுத்தத்தால் பாதிப்படைந்துள்ளேன். அதைச் சமாளிக்க மிகவும் சிரமப்பட்டு வருகிறேன். பொது வெளியில் என்னால் இயல்பாகப் பேச முடியாது. ஊடகவியலாளர் சந்திப்புக்கு முன்பு எனக்குப் பதற்றம் ஏற்படுகிறது. அதனால்தான் பிரெஞ்ச் ஓபின் போட்டியில் அவர்களைச் சந்திப்பதைத் தவிர்க்க நினைத்தேன். சரியான நேரத்தில் போட்டி நிர்வாகங்களுடன் இதுபற்றி விவாதிப்பேன் என்று தன் விலகலுக்கு அவர் விளக்கம் அளித்தார்.

இந்த நிலையில், ஜூன் 14 முதல் ஆரம்பமாகவுள்ள பெர்லின் போட்டியிலிருந்தும் ஒசாகா விலகியுள்ளார். பிரெஞ்ச் ஓபின் போட்டியிலிருந்து விலகிய ஒசாகா, நேராக அமெரிக்கா லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுவிட்டார். தற்போது இரு போட்டிகளிலிருந்தும் அவர் விலகியுள்ளதால் ஜூன் 28 முதல் ஆரம்பமாகவுள்ள விம்பிள்டன் போட்டியில் ஒசாகா கலந்துகொள்வாரா என்கிற கேள்வி எழுந்துள்ளது.

# தகவல் தொழிநுட்ப சங்க தலைவர் மெத்தீவ் கைது

இலங்கை தகவல் தொழில்நுட்பசங்கத்தின் தலைவர் ரஜீவ் யசிரு குருவிட்ட மெத்தீவ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில்ஜனாதிபதிசெயலகவலைத்தளம் உட்பட பல அரசவலைத்தளங்கள் ஹக் செய்யப்பட்டனர் எனக் கூறி போலியானசெய்திகளை பரப்பிய குற்றச்சாட்டுக் காகவே அவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கணினி குற்றச் சட்டத்தை மீறியதற்காக கைதுசெய்யப்பட்ட அவர் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்.

ஜனாதிபதிசெயலகம், வெளிவிவகார அமைச்சு உள்ளிட்ட அரசாங்கத்தின் 6 இணையத்தளங்கள் மீது இணையவழி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன எனக் கூறி இலங்கை தகவல் தொழில் நுட்ப சங்கம் அறிக்கைகளை வெளியிட்டிருந்தன.

எவ்வாறாயினும், குறித்த இணையத்தளங்கள் மீது எந்தவொரு இணையவழி தாக்குதல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தொழிநுட்ப கோளாறே ஏற்பட்டிருந்தது என்றும் இலங்கை கணினி அவசர தயார் நிலை அணி பின்னர்

# 24 மணிநேரத்தில் 1,028 பேர் கைது



சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் உத்தரவுகளைமீறிய குற்றச்சாட்டுக்காக இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் மேலும் 1,028 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 158 பேர் மாத்தளையையும், 108 பேர் கண்டியையும், 93 பேர் நிக்கவெரட்டியவையும் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 25 ஆயிரத்து 886 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தெமட்டகொடை பகுதியில் மேற் கொள்ளப்பட்ட ட்ரோன் கமரா கண்காணிப்பின்போது பயணக் கட்டுப்பாடுகளை மீறியமைக்காக 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று காலை 6.30 மணி முதல் காலை 9.30 மணி வரை கொழும்புக்குள் நுழைந்த வாகனங்கள் தொடர்பாக ஓர் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது 78 ஆயிரத்து 022 வாகனங்கள் கொழும்புக்குள் நுழைந்திருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண குறிப்பிட்டார்.

அவற்றுள் பெரும்பான்மையான வாகனங்கள் (20 ஆயிரத்து 397) நிதி மற்றும் வங்கித் துறைகளில் இணைந்த நபர்களை ஏற்றிச் சென்றன எனவும், அதே நேரத்தில் 9 ஆயிரத்து 710 வாகனங்கள் சுகாதாரத் துறையுடனும், 8 ஆயிரத்து 250 வாகனங்கள் முத்தரப்பு, காவல்துறை மற்றும் பாதுகாப்புப் படையினரின் வாகனங்கள் என்றும் அவர் கூறினார்.

# தான தர்மங்களை செய்வதே மனநிம்மதியைத் தரும்– சபீஸ்

மரணம் எப்போதும் எம்மை சந்திக்கலாம். அதற்கு முன்னர் தான தர்மங்களை செய்வதே எங்களுக்கு மனநிம்மதியைத் தரும் என அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவரும் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ். எம்.சபீஸ் தெரிவித்துள்ளார்.

அம்பாறை- அக்கரைப்பற்றிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் எஸ்.எம். சபீஸ் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடு பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

இதில் மிகப்பெரும் பிரச்சினையாக உருவெடுக்க ஆரம்பித்துள்ளது பட்டினியும் பசிக்கொடுமையும் ஆகும்.

ஆகவே, இதனை இல்லாதொழிக்க 'அயலவருக்கு உதவுவோம்' எனும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம்.

அதாவது உங்களுக்கு அருகில் வசிப்போரின் நிலையறிந்து, உங்களால் முடிந்த உதவிகளைச் செய்வதன் ஊடாக பட்டினி நிலையை இல்லா தொழிக்கலாம்.

மரணம் எப்போதும் எம்மை சந்திக்கலாம். அதற்கு முன்னர் தானதர்மங்களை செய்வது எமக்கு மனநிம்மதியை தரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் பற்றிய கருத்துக்களுக்கு சுகாதார சேவை பணிப்பாளர் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும்

## ஆறு ஊடக அமைப்புகள் கூட்டாக வலியுறுத்து

இலங்கையில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாகக் கூறிய கருத்துக்கள் தொடர்பாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்திடம் பகிரங்க மன்னிப்பு கோருமாறு ஆறு ஊடக அமைப்புகள் கோரியுள்ளன.

சுகாதார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் சந்திப்புக்குப் பின்னர் கருத்து தெரிவித்திருந்த அவர், இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் 'மூன்றாம் வகுப்பு ஊடகவியலாளர்கள்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஆறு ஊடக அமைப்புகள், அவரது கருத்துக்கள் தொடர்பாக அவர் மன்னிப்புக் கோர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன.

# கொவிட் தடுப்பூசியை அச்சமின்றி விரைந்து பெற்றுக்கொள்ளுங்கள்

## வைத்திய நிபுணர் மகேசன் உமாகாந்த் மக்களிடம் கோரிக்கை

கொரோனாத் தடுப்பூசி எங்களுக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும். ஆகவே மக்கள் அச்சமின்றி விரைந்து தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள் என கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியரும் மட்டு. போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணருமான மகேசன் உமாகாந்த் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, கொரோனா தடுப்பூசியை செலுத்திக் கொள்வதன் ஊடாக உங்களை மட்டுமன்றி உங்கள் குடும்பம், சமூகம், நாடு ஆகியவற்றை பாதுகாக்க முடியும் எனவும்

# பயணக் கட்டுப்பாட்டை மதிக்கத் தவறில் தொற்றுப் பரவல் அதிகரிக்கும் வாய்ப்பு

தற்போதைய பயணக் கட்டுப்பாடுகளின் பலன்களை கண்டுகொள்ள சிறிது காலம் ஆகலாம் என்றாலும் மக்களின் நடமாட்டம் தொடர்ந்தால் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளின் உதவியுடன் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியும் என அதிகாரிகள் நம்புகின்றனர் எனவும் கூறினார்.

மேலும் மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த சட்டத்தால் மட்டும் முடியாது எனக் குறிப்பிட்ட அவர் சுய ஒழுக்கம் தேவை என்றும் இல்லையெனில், நிலைமை மோசமாகிவிடும் என்றும் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 15 நாள்களுக்கு முன்பு மிக அதிகமான கொரோனாத் தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பின்னர் அந்த எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இலங்கையிலிருந்து திரும்பிய பயணியால் ஆஸ்திரேலியாவில் கொவிட் கொத்தணி



விக்டோரியாவின் டெல்டா கொவிட் -19 மாறுபாடு கடந்த மாத தொடக்கத்தில் இலங்கையிலிருந்து திரும்பி வந்து, ஹோட்டல்தனிமைப்படுத்தலுக்குள் நுழைந்த பயணியிடையே கண்டறியப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

மே 8 அன்று இலங்கையிலிருந்து வந்து ஹோட்டல் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு நபருடன் மேற்கு மெல்போர்ன் கிளஸ்டரை (கொத்தணி) அதிகாரிகள் மரபணு ரீதியாக இணைத்துள்ளனர் என ஆஸ்திரேலிய பதில் பிரதமர் ஜேம்ஸ் மெர்லினோ அறிவித்துள்ளார்.

40 வயதுடைய நபர் க்ளென் ஈரா நகரில் வசிப்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மே 23 அன்று வெளியேற்றப்படுவதற்கு முன்னர் பிறிதொரு ஹோட்டலுக்கு மாற்றப்பட்டார்.

கொவிட்-19 இன் டெல்டா மாறுபாடு மேற்கு மெல்போர்ண் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந் நிலையில் இலங்கையிலிருந்து திரும்பி வந்த பயணிகளிடமிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வைரஸ் எவ்வாறு பரவியது என்பது தொடர்பாக அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு விக்டோரியாவின் இரண்டாவது கொவிட்-19 அலை தொற்றுகளில் 99 சதவீதத்திற்கும் அதிகமானவை ஹோட்டல்களில் கண்டுபிடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியக் கொடுப்பனவு ஜூன் 10; சிறப்பு போக்குவரத்து ஏற்பாடுகள்

எதிர்வரும் 10 ஆம் திகதி ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடு முழுவதும் தற்சமயம் பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் உள்ள காரணத்தால் சம்பந்தப்பட்ட ஓய்வூதியதாரர்களை நியமிக்கப்பட்ட வங்கிகளுக்கு குறித்த தினத்தில் கொண்டு செல்ல தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்க முப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். கிராம சேவகர்கள், பிரதேச செயலாளர்களின் உதவியுடன் இந்த போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்யப்படும் என்று இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

அதன்படி, ஓய்வூதியம் செலுத்தும் வங்கிகளும் அன்றைய தினம் திறந்திருக்கும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.06.2021இல் வெளியிடப்பெற்றது.